**செய்தி வெளியீடு எண்: 285** **நாள்: 27.04.2018**

## செய்தி வெளியீடு

## சார்பதிவாளர் அலுவலகத்தில் வழங்கிய அல்லது பதிவுத்துறை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்த வில்லங்கச்சான்றிலுள்ள தட்டச்சுப்பிழைகளை சரிசெய்யும் வழிமுறை:

பதிவுத்துறையில் பதிவுச்சட்டம் 1908ன் படி ஆவணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் விவரங்கள் அட்டவணை IIல் தொகுக்கப்பட்டு அதிலிருந்து வில்லங்கச்சான்று விவரங்கள் தேடப்பட்டு பொதுமக்களுக்கு அளிக்கப்படுகின்றன. சார்பதிவாளர் அலுவலகங்கள் கணினி மயமாக்கப்பட்டதிலிருந்து இந்த அட்டவணை II விவரங்கள் 1987லிருந்து கணினியில் உட்புகுத்தப்பட்டு வில்லங்கச்சான்று விவரங்கள் 1.1.1987லிருந்து கணினி மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இணையதளம் மூலம் வில்லங்கச்சான்று விவரங்கள் கட்டணமின்றி பார்வையிடவும் பதிவிறக்கம் செய்யவும் வசதி ஏற்படுத்தப்பட்டு அந்த புதிய வசதி 11.6.2014ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தினந்தோறும் சராசரியாக 20 ஆயிரம் பேர் இந்த வசதியை பயன்படுத்துகின்றனர். வில்லங்கச்சான்று விவரங்கள் 1.1.1975லிருந்து 31.12.1986 வரை கணினியில் உள்ளீடு செய்யும் பணி முடிக்கப்பட்டு 1.1.1975லிருந்து தற்போது வரை கணினி மூலம் வில்லங்கச்சான்று வழங்கும் வசதியும் வில்லங்கச்சான்றை 1.1.1975லிருந்து தற்போது வரை இணையதளம் மூலம் கட்டணமின்றி பார்வையிடவும் பதிவிறக்கம் செய்யவும் தேவையான வசதியும் ஏற்படுத்தப்பட்டு இவ்வசதியானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.2.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. 1.1.1975லிருந்து தற்போது வரை https://tnreginet.gov.in என்ற இணையதளத்திலிருந்து பொதுமக்கள் வில்லங்கச்சான்றை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**<u>அசல் ஆவணத்தில் விவரங்கள் சரியாக இருந்து வில்லங்கச்சான்றில் தவறாக வரும்போது எடுக்க வேண்டிய நடவடிக்கை :</u>**

இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட வில்லங்கச்சான்றிலும், சார்பதிவாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட வில்லங்கச்சான்றிலும் பெயர், சொத்து விவரம் போன்றவற்றில் ஏதாவது தவறுகள் இருப்பின் அதனை சரிசெய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் தாங்கள் பதிவு செய்த அசல் ஆவணத்தில் விவரங்கள் சரியாக இருந்து சார்பதிவாளர்

அலுவலகத்தில் பெற்ற வில்லங்கச்சான்றிலோ இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்த வில்லங்கச்சான்றிலோ தவறுகள் ஏதும் இருப்பின் அது தொடர்பான தவறை சரிசெய்யக் கோரி சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு பெறப்படும் மனுக்களை சார்பதிவாளர் சார்பதிவகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் அசல் ஆவண தொகுதிகளுடனோ கணினி மயமாக்கப்பட்ட பின்பு ஆவணம் பதிவு செய்யப்பட்டு இருப்பின் மைய கணினியில் சேகரித்து வைக்கப்பட்ட ஆவணப்பிம்பங்களுடனோ (Document image) ஒப்பிட்டு பார்த்து மனுவில் தெரிவிக்கப்பட்ட விவரம் சரியாக இருப்பின் சரியான விவரத்தை கணினியில் உள்ளீடு செய்து அதனை சம்பந்தப்பட்ட மாவட்டப்பதிவாளருக்கு ஒப்புதலுக்காக அனுப்பிவைப்பார். மாவட்டப்பதிவாளர் ஒப்புதல் அளித்தவுடன் மென்பொருள் வழியாக அட்டவணை II தரவு தானாகவே மாற்றம் செய்யப்பட்டு உடனடியாக இணையதளத்தில் சரியான விவரங்கள் வில்லங்கச்சான்றில் பிரதிபலிக்கும். பொதுமக்கள் இந்த வசதியை பயன்படுத்தி தாங்கள் பெற்ற அல்லது பதிவிறக்கம் செய்த வில்லங்கச்சான்றிலுள்ள தவறான விவரங்களை சரிசெய்துக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் இத்தவறுகளை சரிசெய்ய வீட்டிலிருந்தபடியே இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் வசதி விரைவில் ஏற்படுத்தப்படும்.

**<u>பதிவு செய்த அசல் ஆவணத்திலேயே விவரங்கள் தவறாக இருப்பின் எடுக்க வேண்டிய நடவடிக்கை:</u>**

பொதுமக்கள் பதிவு செய்த அசல் ஆவணத்திலேயே விவரங்கள் தவறாக எழுதப்பட்டிருப்பின் அதனை சரிசெய்து கொள்ள எழுதி கொடுத்தவரும், எழுதி வாங்கியவரும் சேர்ந்து பிழைதிருத்தல் ஆவணம் சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து தவறினை சரிசெய்து கொள்ளலாம் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

(ஜெ. குமரகுருபரன்)
பதிவுத்துறைத்தலைவர்,
சென்னை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**